
# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 10 ஏப்ரல்- 1997 இதழ் -4



வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சேதப்படுத்தப்பட்ட விசுவாசம் | 1 |
| 2. | நற்செய்தி கூறும் உண்மைகள் | 10 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | நீங்கள் உண்மையாகவே இரட்சிக்கப் படுகிறீர்களா | 17 |
| 6. | குழந்தைகளுக்கு திருமுழுக்கு தேவையா | 19 |
| 7. | பிரசங்கியின் பிரசங்கப் பொருள் | 25 |
| 8. | ஒருவன் மறுபடியும் பிறப்பது சாத்தியமா | 28 |
| 9. | சத்தியத்தில் நட | 30 |

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 10 APRIL - 1997 Issue -4

## ஆசிரியவுரை

# "சேதப்படுத்தப்பட்ட விசுவாசம்"

பூமிக்குரிய இச்சரீர வாழ்க்கையில் சேதம் என்ற வார்த்தையைக் கேட்க நாம் யாரும் ஒருபோதும் விரும்புவதில்லை. ஆனால், நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், பல வகையான சேதங்களை நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டும், அதன் விளைவுகளை அனுபவித்துக் கொண்டும் உள்ளோம்.ஏற்படும் சேதங்களை முற்றிலும் தடுத்து நிறுத்த நாம் எவ்வளவு தான் முயற்சி எடுத்தாலும், நாம் எதிர்பார்க்கும் வெற்றி கிடைப்பதில்லை.

ஆகவே தான், சேதங்கள் பற்றிய செய்திகளை நாம் தினசரிகளில் வாசிக்கிறோம். வானொலிப் பெட்டிகளின் மூலம் கேட்கிறோம். தொலைக் காட்சியின் மூலம் அவைகளைப் பார்க்கவும் செய்கிறோம். நேரிடும் சேதங்கள் வகைவகையானவை. அவை மண்ணூர்திகள் மோதிக் கொள்வதாலும், விண்ணூர்திகள் விழுந்து நொறுங்குவதாலும், நீர் ஊர்திகள் மூழ்குவதாலும், அடுக்குமாடிக் கட்டிடங்கள் சரிவதாலும், இன்னும் அவைகளில் பெரும் தீ விபத்துகள் ஏற்படுவதாலும் இன்னும் பல காரணங்களாலும் நிகழ்கிறது. மானிடத்தின் மதி குறைவால் ஏற்படும் இவ்வகைச் சேதங்களோடு, அநேக சமயங்களில் இயற்கையும் வலியவந்து கூட்டுச் சேர்ந்து ஒரு கை பார்க்கிறது. சேதங்களின் தன்மை அவைகளால் ஏற்படும் இழப்பு களை அடிப்படையாக வைத்து மதிப்பீடு

செய்யப்பட்டாலும், பெருஞ் சேதத்திற்கு ஆதாரமாக உயிர்ச்சேதமே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகிறது..

மொத்தத்தில், சேதம் எந்த வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அது நெஞ்சுக்கு நோவை ஏற்படுத்தக்கூடியதே. ஆனால், எல்லாவற்றையும் மிஞ்சக்கூடிய ஒரு சேதம், மனிதனின் வாழ்க்கையில் மறைந்திருந்து, அவன் ஆன்மாவைத் தீர்வே இல்லாத ஒரு பெருஞ்சேதத்திற்கு மெல்லத் தள்ளிச் சென்று கொண்டிருக்கிறது. அதைப்பற்றிய அறிவு துளியும் இல்லாமல், அழிவின் பாதையில் வெற்றி நடை போடுகிறான் மனிதன். அது என்ன என்கிறீர்களா? தன்னை உண்டாக்கின பரலோகத்தின் தேவன் மீது நம்பிக்கை வைக்காமல், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் வாழும் ஒரு வாழ்க்கையினால் ஏற்படும் சேதமே அப்பெருஞ்சேதம்.

இது, ஏன் பெருஞ்சேதம் என்றால், பூமியில் நாம் காண்கின்ற சேதங்களால் ஏற்படும் தீமைகளும், வேதனைகளும், கண்ணீர்களும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையக் கூடியது. மற்றும் மெல்ல மெல்ல மாறக்கூடியது. ஆனால் விசுவாசக் குறைவினால் ஏற்படும் சேதமோ நிலையானது; நீடித்திருக்கக் கூடியது; என்றென்றும் மாறாதது.; கால எல்லைகளைக் கடந்தது. அது நித்தியமானது. ஆகவே தான், இச் சேதம் பூமியின் சேதங்களை "மிஞ்சும்" சேதமாகச் சொல்லப்படுகிறது..

இப்பெருஞ் சேதத்திற்குத் தப்பியவர்கள் மற்றும் சிக்கியவர்கள் பட்டியல் பரிசுத்த வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எபிரேயர் 11-ம் அதிகாரத்தில் விசுவாசக் கப்பலை சேதப்படுத்தாமல் ஒழுங்காக ஓட்டிக் கரை சேர்ந்தவர்கள் யார் யாரென்று விபரமாக நமக்கு அடையாளம் காட்டப்பட்டுள்ளனர். சிலர், இக் கப்பலைச் சேதப்படுத்தியுமுள்ளனர். அவர்களில் இருவர் நேரிடையான குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளனர். அவர்களைப் பவுல் தன்னுடைய நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார். "**இந்த நல் மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனெயும், அலெக்சாந்தரும் அப்படிப்பட்டவர்கள் ...**" (I தீமுத். 1: 19, 20). ஏதோ இவர்கள் மாத்திரமே தவறு செய்தவர்கள் என நாம் நினைக்கத் தேவையில்லை. ஏனெனில் இவர்களின் தலைமையின் கீழ் அணிவகுத்து நிற்க இவ்வுலகம் முழுவதும் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறது.

சரி, நம்முடைய தலைப்பிற்குத் துணை நிற்க, விபரமாகச் சொல்லப்படாத இந்தப் புதிய ஏற்பாட்டு மனிதர்களின் உதவியை நாடுவதைக் காட்டிலும், நம்மெல்லோருக்கும் பழக்கப்பட்ட பழைய

ஏற்பாட்டு ராஜா ஒருவனின் ஒத்தாசையைக் கேட்டுப் பார்க்கலாம் என எண்ணுகிறேன்.

ஆஜானுபாகுவான சரீர அமைப்புக் கொண்ட அந்த ராஜாவின் பெயர் சவுல். இஸ்ரவேலின் கடைசிக் கோத்திரமான பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த இவன் தகப்பன் பெயர் "கீஸ்". ( I சாமு. 9 : 1–2) இவனைப் பற்றி அதிகம் அறிவிப்பது அவசியமில்லாதது. ஏனெனில், இவன் நம் யாருக்கும் புதியவனல்ல.

எதற்கும், இவன் ராஜா ஆன பின்னணியைக் கொஞ்சம் ஞாபகப்படுத்துகிறேன். மாபெரும் தலைவனாகிய யோசுவாவின் மரணத்திற்குப் பின், தேவன் தம்மால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதிகளைக் கொண்டு இஸ்ரவேலை சுமார் 350 ஆண்டுக் காலம் ஆண்டு வந்தார். எதிலும் மனமேவுதலை எளிதில் பெற்றுக் கொள்ளாத இஸ்ரவேலர், நியாயாதிபதிகள் விஷயத்திலும் திருப்திப்படவில்லை. மற்ற ஜாதிகளுக்கு இருப்பதுபோல் எங்களுக்கும் ராஜா வேண்டுமென்று சாமுவேலிடம் முறையிட்டனர். (I சாமு 8 : 5)

இவர்களின் இக்கோரிக்கையில், கர்த்தர் கடுமையாக அதிருப்தியுற்று. இது குறித்த சாமுவேலின் விண்ணப்பத்திற்கு இவ்விதமாக பதில் தந்தார். **"ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்"** (8 : 7) என்றார்.

அதுமாத்திரமல்ல, ராஜாவினால் அவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் எற்படும் தீமைகளையும் விபரமாக எடுத்துக் கூறினார் (8:11–22) இருப்பினும், தன்னுடைய கடுமையான அதிருப்திக்கும், எச்சரிப்புக்கும் ஜனங்கள் செவிகொடுக்காதே போனபடியால், அவர்களின் "ராஜா கோரிக்கையை" ஏற்றுக் கொண்டார்.

இஸ்ரவேல் என்பது பூமியின் கீழிலிருக்கிற சகல ஜனத்திலும் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம். என்னுடைய ஜனமென்று தேவன் இவர்களை மாத்திரமே அழைத்தார் (II நாளா. 7 : 14). பரலோகத்தின் தேவன், பல இடங்களில் தன்னை இஸ்ரவேலின் தேவனென்றே வெளிப்படுத்தி யிருக்கிறார். இந்தளவுக்கு சிலாக்கியம் பெற்ற ஜனத்திற்கு ராஜா என்பது சாதாரண விஷயமல்ல. அதுவும் எப்படி முதல் ராஜா. எப்பொழுதும் முதல் என்பது பெருமைக்குரியது. நினைவில் நிற்கக் கூடியது. ஏன், சரித்திரத்திலும் இடம்பிடிக்கக் கூடியது.

*திருமறை ஆசான்*

இவ்வளவு மகிமை பொருந்திய இந்த ராஜா ஸ்தானம் சவுலுக்கு எப்பொழுது கிடைத்தது தெரியுமா? ஒருசமயம், காணாமல் போன தன் தகப்பனுடைய கழுதைகளைத் தேடிட தன் வேலைக்காரனோடு சென்றான். ஊரெல்லாம் சுற்றி, மேடு பள்ளங்களெல்லாம் ஏறி, இறங்கி, சளித்துப் போய், சரி, இனி வீடு திரும்பலாம் என எண்ணின வேளையில், வேலைக்காரனின் வேண்டுகோளின்படி, அரைகுறை மனதோடு சாமுவேலைச் சந்திக்கச் சென்றான். அங்கு தான், கழுதையைத் தேடிச் சென்ற இவனுக்கு "ராஜ அதிர்ச்சி" காத்திருந்தது ( 9 : 1–21).

உன்னத தேவனால் தெரிந்து கொள்ளப்படுமளவிற்கு ஆரம்பத்தில் இவனுக்கு விசுவாசம், தேவன் மீது நம்பிக்கை இருந்திருக்கவே வேண்டும். ஏனெனில் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கும் நமது தேவன், தகுதியில்லாத ஒருவனை தன்னுடைய வேலைக்காகத் தெரிந்து கொள்ளமாட்டார். ஆனால் தன்னுடைய நம்பிக்கைக்கு இவ்வளவு பாத்திர வானாயிருந்த இதே சவுலைக் குறித்து தேவன் தமது வசனத்தில் பின்னாளில் எப்படிக் கூறுகிறார் எனக் கவனியுங்கள். **"அதற்குச் சாமுவேல் : கர்த்தர் உன்னை விட்டு விலகி, உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்? (28 : 16).** இப்பொழுது சவுல் கர்த்தருக்குச் சத்துரு. ஆம், எதிரி. எப்படி நேர்ந்தது இந்த மாற்றம்? இராஜாவாகிய சவுல் தன்னுடைய விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்தியுள்ளான். விசுவாசம் இருந்தது எழுந்தான். விசுவாசத்தை சேதப்படுத்தினான். வீழ்ந்தான்.

இவன் எப்படி தனது விசுவாசத்தை சேதப்படுத்தினான் என்று சிலவற்றை ஆராய்ந்தால், நாம் நமது விசுவாசத்தை சேதப்படுத்தாமல் காத்துக் கொள்ளப் பிரயோஜனமாய் இருக்குமென நம்புகிறேன்.

## I. சோதனையான நேரத்தில் தடுமாறினான்

தனது ராஜ்யபாரதத்தின், இரண்டாம் வருஷத்தில் சவுல் ஒரு யுத்தத்தைச் சந்திக்க வேண்டியவனாக இருந்தான். பெலிஸ்தர், முப்பதினாயிரம் இரதங்களோடும், ஆறாயிரம் குதிரை வீரரோடும், கடற்கரை மணலத்தனை ஜனங்களோடும் வந்து பாளையமிறங்கி யிருந்தனர் (13 : 5). நிலைமையைக் கண்டறிந்த நன்றியில்லாத இஸ்ரவேலர், பயந்து நடுங்கி, **"கெபிகளிலும், முட்காடுகளிலும், கன்மலைகளிலும், துருக்கங்களிலும், குகைகளிலும் ஒளித்துக் கொண்டார்கள்"** (13 : 6)

சாமுவேல் வந்து பலி செலுத்தி யுத்தத்தைத் தொடங்கி வைப்பான் என்று எதிர்பார்த்த ஜனங்கள். அவன் வரத் தாமதமானபோது சிதறி

ஓடிப்போனார்கள் (13 : 8). **அப்பொழுது சவுல், சர்வாங்க தகன பலியையும் சமாதான பலிகளையும் என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்று சொல்லி, சர்வாங்க தகன பலியைச் செலுத்தினான்.** (வ. 10).

தனது இராஜ்யபாரம் தள்ளுண்டு போவதற்கும் விசுவாசக்கப்பலைச் சேதப்படுத்துவதற்கும் இங்கே தான் போட்டான். அப்படி என்ன தவறு செய்துவிட்டான் என்று கேட்கிறீர்களா? நீர் செய்தது என்ன என்று சவுலைப் பாரத்து சாமுவேல், கேட்டதற்கு, சவுலின் பதிலைப் பார்த்தால், அவன் ஒன்றும் பெரிய தவறு செய்யவில்லை என்றே தோன்றுகிறது. நானும் உங்களைப் போலத்தான் நினைக்கிறேன். ஆனால், வேதாகமம் வேறுவிதமாகச் சொல்கிறதே. **"புத்தியீனமாய் செய்தீர்"** என்று சவுல் கடிந்து கொள்ளப்படுகிறாரே. தேவன் நீதி தவறாதவராயிற்றே, பொய்யாகச் குற்றம் சாட்டி தண்டிக்கமாட்டார் தானே. அப்படியானால் சவுல் என்ன தான் தவறு செய்தான்?

அவன் செய்த தவறு அவனுடைய அவிசுவாசம் தான். என்ன் நேர்ந்தாலும், எது வந்தாலும், எப்படி நடந்தாலும் பரவாயில்லை. கர்த்தர், என்னையும் என் ஜனங்களையும் காப்பாற்றுவார் என்று விசுவாசியாமல், பொறுமையிழந்தான். தோல்வியே வந்தாலும், கர்த்தர் இதை வேறுவகை யாய் நடத்துவார் என்று நம்பவில்லை. சாமுவேலின் வேலையை, அவசரப்பட்டு தானே செய்தான். **பலி செலுத்துவதின் வெளி ஆசாரங்களைச் செய்தானே ஒழிய அதில் அடங்கியிருக்கும் உட்கருத்தை அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.** இப்படிப்பட்ட காரியத்தைக் கர்த்தர் ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. அங்கீகரிப்பதில்லை. அங்கீகரிக்கப் போவதுமில்லை.

ஒருவேளை சவுல், தான் ராஜாவாக இருக்கிறபடியால் தான் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம், எல்லாவற்றையும் கர்த்தர் ஏற்றுக் கொள்வார் என்று எண்ணியிருக்கலாம். உலக அந்தஸ்தெல்லாம் அவர் பார்வையில் ஒன்றுமில்லையென்பது ஏனோ அவனுக்கு விளங்காமற் போயிற்று. எப்படியோ, அவன் தனது விசுவாசக் கப்பலை சேதப்படுத்தும் முதல் வேலையை இங்கே வெற்றிகரமாகத் துவக்கிவிட்டான்.

அன்பரே! நம்முடைய விசுவாசக் கப்பல் எப்படிப் போய்க் கொண்டுள்ளது? சோதனையான நேரத்தில் கர்த்தர் மீது முழு விசுவாசம் வைத்துப் பொறுமை காக்கிறோமா? அல்லது அவசரப்பட்டு மாற்று ஏற்பாடு செய்து சிக்கலில் மாட்டிக் கொள்கிறோமா? பொறுமையின் சிகரமாகிய யோபுவையும், அவன் வாழ்க்கையையும், அதினால் அவன்

பெற்ற இரட்டிப்பான ஆசீர்வாதத்தையும் நாம் அறிவோம். ஆகவே, சோதனையில் பொறுமை காத்து, தேவ சித்தத்துக்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்.

அடுத்து, கர்த்தருடைய மனிதன் செய்ய வேண்டிய வேலையை, அவனே வந்து செய்யட்டும் என்று காத்திருப்போம். புதிய பிரமாணத்தின் நிலை கொஞ்சம் வேறாக இருந்தாலும், கர்த்தருடைய ஊழியனை உதாசீனப்படுத்து என்று எங்கும் சொல்லவில்லையே. ஆனால், இன்று கிறிஸ்தவ சமுதாயத்தில் என்ன நடக்கிறது? உலகக் கல்வியும், அந்தஸ்தும் இருக்கிறபடியால், தாங்கள் சமுதாயத்தில் செல்வாக்குள்ளவர்களாக இருக்கிறபடியால், கர்த்தருடைய காரியத்தில் கூட தாங்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம். எப்படிச் செய்தாலும் தேவன் தங்கள் செய்கையை ஏற்றுக் கொள்வார் என்று நம்புகின்றனர். தவறு, சகோதரனே, தவறு.

நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ள, விசுவாசக் கப்பலை நாம் நம்முடைய பொறுமையின்மையாலும், வெளிப்படையான சடங்குகளாலும், அகந்தையான எண்ணத்தினாலும் சேதமாக்க வேண்டாம்.

## II. சுயசித்தமுள்ளவனாயிருந்தான்

சவுலின் அடுத்த சறுக்குதலுக்கான காரணம் 15–ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அமலேக்கியரோடு, யுத்தம் எப்படி இருக்க வேண்டுமென்று கர்த்தர் சாமுவேலைக் கொண்டு சவுலுக்குச் சொல்கிறார். இந்த அமலேக்கியர் வனாந்திர யாத்திரையில் இஸ்ரவேலுக்கு செய்த தீமைகளை, சுமார் 400 ஆண்டுகளாகியும் மறக்காத தேவன், அவர்களை ஈவிரக்கமில்லாமல் நிர்மூலமாக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறார். " **.... நீ போய் அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன் மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக் கடவாய் என்கிறார் என்று சொன்னான்**" (15 : 3).

தேவசித்தம் இப்படித் தெளிவாக வெளியாகியிருக்கும் போது, சவுல் செய்தது என்ன? "சவுலும் ஜனங்களும், ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக் குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல் தப்ப வைத்தான் . . . " (15 : 9).

இங்கே, சவுலுடைய தவறு என்ன? தேவசித்தத்தைக் காலின் கீழ் போட்டு மிதித்துவிட்டு, சுயசித்தத்தின்படி நடந்தான். இரண்டாவது தேவ கட்டளையை அரையும் குறையுமாக ஒப்புக்கு நிறைவேற்றினான். மூன்றாவதாக தனது கீழ்ப்படியாமையை நியாயப்படுத்தும் விதத்தில், பலி செலுத்துவதற்கு இவைகளை ஜனங்கள் கொண்டு வந்தார்கள் என்று சொல்லி, பழியை மற்றவர்கள் மீது போட்டான். (15 : 15).

எரிச்சலடைந்த சாமுவேல், பேச்சை நிறுத்தும் எனக்கடிந்து விட்டு, மேலும், கர்த்தர் இன்று இராத்திரியிலே எனக்குச் சொன்னதை உமக்கு அறிவிக்கிறேன் என்று சொல்லி, அவனுடை கீழ்ப்படியாமையை கோடிட்டுக் காட்டினான். கர்த்தரின் சொல்லைக் கேளாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன' என்று கேட்டான். (15. 19). தொடர்ந்து வாசித்தால், எது முக்கியம் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறான். "அதற்குச் சாமுவேல் : கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்றான்" (வ. 22).

நாம் எப்படி நடக்கிறோம்? கர்த்தருடைய சத்தத்திற்குச் செவி கொடுக்காமல், மற்ற செய்கைகளின் மூலம் நீதியை நிலை நாட்டி விடலாம் என்று இந்த சவுலைப் போல எண்ணுகிறோமா? முடியாது. தேவன் அவைகளில் பிரியப்படுவது இல்லை. ஒரு வேளை நாம் அவரைத் துதித்து அழகாகப் பாடலாம், மணிக்கணக்கில் ஜெபிக்கலாம். வாரந்தவறாமல் ஆராதனைக்கு வரலாம், தாராளமாகக் காணிக்கை கொடுக்கலாம், சரீரத்தை வருத்தி உபவாசம் இருக்கலாம், விமரிசையாக பண்டிகைகள் கொண்டாடலாம் இன்னும் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நாம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாத போது, மேற்சொன்ன எதிலும் அவர் பிரியப்படமாட்டார். அனைத்தும் வீண்.

என் வசனத்துக்கு நடுங்கிறவனையே நோக்கிப் பார்ப்பேன் என்று அவர் சொல்கிறார். எசா. 66:2 வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபம் அருவருப்பானது என்றும் சொல்கிறார். (நீதி. 28: 9).

தன்னுடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் மனிதன் தன்னைக் கீழ்ப்படுத்த வேண்டுமென்பதை, இதைவிடத் தெளிவாக எப்படிச் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்? இதே போதும் என்பது உங்கள் பதிலாக இருக்குமானால், பின் ஏன் அற்புதம் என்றும் அடையாளமென்றும் ஆவி என்றும், சாட்சி என்றும் அலைகிறீர்கள்

வசனத்திற்கு மாறான காரியங்களை இன்னும் செய்கிறீர்கள்? உங்கள் விசுவாசக் கப்பல் கரைசேர வேண்டாமா?

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தன்னுடைய விசுவாசக் கப்பலை சேதப்படுத்தியதால் சவுல் இழந்துபோனது பூமிக்குரிய மகிமை. ஆனால் நாம், தேவ வசனத்தைப் புறக்கணிப்பதால் இழந்து போவது நித்திய மகிமை. இழந்து போகும் படியாகவா நீங்கள் கிறிஸ்தவர்களாக ஜீவித்துக் கொண்டுள்ளீர்கள்? இல்லைதானே.

அப்படியானால் நாம் ஒவ்வொருவரும் நம்மை தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்போம். சுய சித்தத்தைத் தூக்கி எறிவோம்.

## III. உற்ற நண்பனை அறியாதிருந்தான்

நல்ல நண்பன் யாரென்பதற்குப் பல இலக்கணங்கள் உண்டு. நீதிமொழிகளில் "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான் . . ." என்று ஞானி சாலமோன் அழகான ஒரு விளக்கம் கொடுக்கிறார் (17 : 17) இந்த சாமுவேலும் கூட சவுலை எப்பொழுதும் சிநேகித்தான். தேவ கட்டளைப்படி அவனைக் கடிந்து கொண்டாலும், அவனைத் தொடர்ந்து நேசித்தான்.

அமலேக்கோடே நடந்த யுத்தத்தில், சவுல் தன் சொல் கேளாதபடியால், "சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாப மாயிருக்கிறது; அவன் என்னை விட்டுத் திரும்பி என் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான் என்றார். அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, **இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்**" (15 : 11). இந்த கர்த்தருடைய மனிதனுக்கு சவுல் ராஜாவின் மீது எவ்வளவு பாசமும் அக்கறையும் இருந்தது பாருங்கள். தன்னை இந்தளவுக்கு நேசித்த ஒருவனின் மனதை இவன் ஒரு போதும் புரிந்து கொள்ளவில்லை.

ஒருவேளை, சவுல் ராஜா எப்பொழுதும் இந்தக் கர்த்தருடைய மனிதனாகிய சாமுவேலின் சொற்கேட்டு நடந்திருந்தால் இந் நிலை இவனுக்கு நிச்சயமாக வந்திருக்காது. தேவனைவிட்டு இவன் விலகிச் சென்றிருக்கத் தேவையில்லை. விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தி, மேன்மையை இழந்து போயிருக்கவும் தேவையில்லை.

இரா முழுவதும் சவுலுக்காக மன்றாடின சாமுவேலைப் போல நல்ல நண்பர்கள் நம் ஒவ்வொருவருக்கும் உண்டா? நாசியிலே சுவாசமுள்ள மனிதனை நம்பவேண்டாமென்று வசனத்தில் சொல்லிவிட்டு நல்ல நண்பன் உண்டா என்று கேட்டால், நாங்கள் எங்கே போவோம் என்கிறீர்களா? கவலைப்படாதீர்கள். சாமுவேலைக் காட்டிலும் நல்ல நண்பர் நமக்கிருக்கிறார். அவனைக் காட்டிலும் நம்மீது கரிசனை உள்ளவர், அவர்.

யோவான். 15 : 15 –ஐக் கவனியுங்கள். "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதரா யிருப்பீர்கள்" என்று இயேசு சொல்கிறார். இந்த நண்பர் நமக்காக என்ன செய்தார்? தன் ஜீவனையே கொடுத்தார். (யோவா. 3 : 16) நமக்காக உயிர் கொடுத்த இயேசு இரா முழுவதும் மன்றாடின சாமுவேலைக் காட்டிலும் நல்ல நண்பர் தானே.

சரி, இவ்வளவு தூரம் நம்மை நேசிக்கும் இவரின் ஆலோசனைக்கு நாம் ஏன் செவி சாய்க்கக் கூடாது? இவர் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்? அன்று, தேவ மனிதனாகிய சாமுவேலின் வார்த்தைக்குச் செவி கொடாமல், இராஜ்யபாரத்தை இழந்துபோன சவுல் போல, இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தைக்குச் செவிகொடாமல் நித்தியத்தை இழக்கப் போகிறோமா?

அன்பரே! நண்பரே! சாகோதரரே! சிந்திப்போம். சவுல்ராஜவைப் பற்றி அநேகந்தரம் வாசித்தும், கேட்டும் இருக்கிறோம். ஆனால், அவன் கொஞ்சம் வித்தியாசமான மனிதனாக இன்று நம்மிடம் வந்துள்ளார். இப்பொழுது அவர் இராஜாவாக நம் முன் நிற்காமல், பாடம் புகட்டும் ஆசானாக நிற்கிறார். ஆகவே, அவருடைய வாழ்க்கையின் மூலம் கிடைக்கும் பாடத்தைக் கற்றுக்கொள்வோம். **"...முன்பு எழுதியிருக் கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" என்று பவுல் உரோமையருக்கு எழுதும் போது குறிப்பிடுகிறார். (ரோம. 15 : 4).**

ஆகையால், சவுல் ராஜா தன்னுடைய விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்தினதுபோல நாம் சேதப்படுத்த வேண்டாம். தேவன் மீது வைத்த நம்பிக்கையை வீணடிக்க வேண்டாம் அழைப்பை உதாசீனம் செய்ய வேண்டாம். மேன்மையை இழந்து போகவும் வேண்டாம்.

சவுலைப் போலல்லாமல், சோதனையான நேரத்தில் உறுதி காட்டுவோம், விசுவாசத்தில் எழுந்து நிற்போம், தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்போம். நல்ல நண்பராகிய இயேசுவின் ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக் கொண்டு அவர் தமது வசனத்தில் சொல்லியுள்ளபடி விசுவாசித்து (ரோம. 10 : 17) மனந்திரும்பி (II கொரி. 7 : 10) அறிக்கையிட்டு (ரோம. 10 : 9, 10) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 2:38), நல்ல நண்பராகிய இயேசு கட்டின அந்த ஒரு சபையில் அங்கமாகி (அப். 2 : 47), இறுதிவரை விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தாமல் வாழ்ந்து பரலோக பாக்கியத்தைப் பெறுவோம்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**EZS. ராஜநாயகம்.**

## பாடம் - 2

# நற்செய்தி கூறும் உண்மைகள்

இயேசு கிறிஸ்து மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், அதன் பின்னர் கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தார் என சுவிசேஷம் தெளிவாகக் கற்பிக்கிறது. இயேசுவின் சரித்திரத்திலுள்ள இந்நிகழ்ச்சிகள், நற்செய்தி கூறும் உண்மைகள் எனக் குறிப்பிடப்படுகின்றன. பவுல் தனது கொரிந்து சகோதரர்களுக்கு எழுதும்போது இவை ஒவ்வொன்றைப் பற்றியும் குறிப்பிட்டு, இந்த உண்மைகளுக்குத் தொடர்புள்ள அவர்களுடைய இரட்சிப்பைப் பற்றி, "அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக் கொண்டிருந்தால் அதினாலே நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்ன வென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின் படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து..." என்பதாக I கொரிந்தியர் 15:1–4 வசனங்களில் பவுல் கூறுகிறார். வேறு விதமாகக் கூறின் இந்த சத்தியங்களில் தான் கிறிஸ்துவின் நற்செய்தி அடங்கியுள்ளது. கிறிஸ்து மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, உயிர்த்தெழாமல் இருந்திருந்தால், ஒரு நற்செய்தியும் இருந்திருக்காது, எனவே இரட்சிப்பும் இருக்காது. ஆனால் அவர் மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, உயிர்த்து எழுந்தபடியால், நற்செய்திக்கான ஒரு அஸ்திபாரம் நமக்குப் போடப்பட்டு, அது உலகத்தையே மாற்றியுள்ளது.

இந்த நற்செய்தியின் உண்மைகளை இப்போது நாம் ஒவ் வொன்றாக ஆராய்ந்து பார்த்து அவை நமக்கு என்ன வைத்துள்ளன பார்க்கலாம் :

### 1. கிறிஸ்துவின் மரணம்

கிறிஸ்து மரித்தார் என்பதை வேதாகமம் திரும்பத் திரும்பச் சொல்லுகிறது. தேவனுடைய வார்த்தைக்கே நாம் செவி சாய்ப்போம் : "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனிதச் சாயலானார். அவர் மனித ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலிப். 2:5-8) "என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொரு வருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவ தூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்." (எபிரேயர் 2:9)

கிறிஸ்து யாருக்காக மரித்தார்? எபிரேயர் 2ம் அதிகாரம் 9ம் வசனத்தில் நாம் பார்த்தபடி, அவர் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரித்தார். பாவிகளுக்காக மரித்தார் என்றும் சுவிசேஷம் கூறுகிறது. கவனியுங்கள்: "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5:8) ஆனால், பாவிகளுக்காக அவர் ஏன் மரித்தார்? இரட்சிப்பையும், நம்பிக்கையையும் அளிப்பதற்காக மரித்தார். நாம் படிக்கிறோம் : "எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." (1தீமோ. 2:4) "தாமதிக்கிறார் என்றுசிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்." (2 பேதுரு 3:9)

அப்படியானால், உங்களுக்காகவும், எனக்காகவும் ஒருவர் மரித்தார் என்று தெரிகிறது. அதைப் பற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். நாம் பாவிகளாக இருந்து, தேவனுக்கு விரோதிகளாக இருந்த போதிலும், இத்தகைய கருணைக்கும் கிருபைக்கும் தகுதியற்றவர்களாக இருந்த போதிலும், கிறிஸ்து பரலோகத்தை விட்டு பாவமும் துன்பமும் நிறைந்த இவ்வுலகிற்கு இறங்கி வந்து, நாம் இரட்சிக்கப்பட்டு, நித்திய ஜீவனின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக, சிலுவையில் அறையப்பட்டு மரிக்க சித்தமானார். (ரோமர் 5:6,7) எவ்வளவு அதிசயமான செய்ல்! இந்த உலகில் உள்ள சகலருக்காகவும் - நேற்று, இன்று, நாளை இவ்வுலகில் வாழ்ந்த, வாழுகின்ற, வாழப்போகும் எல்லா மக்களுக்காகவும் அவர் மரித்தார் என்பதை சற்றே சிந்தித்துப் பாருங்கள். அவருக்கு எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்? அந்த உணர்வுடன் அவருக்கு நாம் கீழ்ப்படிந்து, அவருக்கு

உண்மையுள்ளவர்களாகி இருக்கவேண்டும். இதற்கும் குறைவாகச் செய்ய நாம் எவ்வாறு துணிவோம்?

**2. கிறிஸ்துவின் அடக்கம் :**

கிறிஸ்துவின் சிலுவையில் மரித்த பின்பு, பதிவேடு கூறுவது போல, “சாயங்காலமான போது, இயேசுவுக்குச் சீடனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனிதன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையிலே வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப் போனான். அங்கே மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்.” (மத். 27:57–61)

இப்போது, கர்த்தருடைய அடக்கத்தில் பலவழிகளிலேயும் வழக்கத்திற்கு விரோதமான எந்த ஒரு மாற்றத்தையும் காணவில்லை. தினமும் மனிதர்கள் மடிகின்றனர்; அடக்கப் செயப்படுகின்றனர். உலகத் தோற்ற முதல் நடைபெற்றுக் கொண்டு வரும் காரியந்தான் இது. ஆனால், தாம் மரித்து அடக்கம் செய்யப்பட்டால், மீண்டும் உயிர்த்தெழுவதாக கர்த்தர் வாக்களித்திருந்தார். “...இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்” (யோவான் 2:19) என அவர் அறிவித்திருந்தார். அந்த நேரத்தில் அவரை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பது உண்மைதான். ஆனால், புரிந்து கொண்டிருந்திருப்பார்களேயானால், அவரை விசுவாசித்திருப்பார்களா? அவருடைய மரணம், அடக்கத்திற்குப் பின்னர் நடந்ததென்ன? எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்ற உணர்வில், அவருடைய சீடர்கள் அதிர்ச்சி அடைந்த நிலையில் இருந்தனர். பின் என்ன நடந்தது? அவர் வாக்களித்தபடியே இயேசு உயிர்த்து வந்தார்.

**3. கிறிஸ்துவின் உயிர்ப்பு :**

கிறிஸ்து சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, கல்லறையிலேயே அவர் இருந்திருந்தால் உலகம் அவரை மறந்து போயிருக்கும். ஒரு வேடதாரி என்று மட்டுமே அவரை நினைத்துக் கொண்டிருக்கும். மரித்து, கல்லறையிலேயே அவர் இருந்திருப்பின் எல்லாரையும் போல அவரும் ஒரு மனிதர்தான் என்று சொல்லப் பட்டிருப்பார். ஆனால் இயேசு வித்தியாசமானவராக இருந்தார் அவர்

தேவனுடைய குமாரன். கல்லறையிலிருந்து எழுவேன் என அவர் கூறியிருந்தார். அந்தப்படியே செய்தார். (மத்தேயு 28) அவருடைய உயிர்ப்பின் விளைவாக, இரட்சிப்பும், எல்லாரும் உயிர்க்கவும், நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையும் உறுதி செய்யப்பட்டிருக்கின்றன.

கர்த்தரின் உயிர்ப்பு பற்றிய சில வசனப் பகுதிகளை நாம் இங்கே கவனிப்போம் : ".... மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்" (ரோமர் 1:5). "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும் அவருடைய மரணத்திற் கொப்பான மரணத்திற்குள்ளாகி..." (பிலிப். 3:10) "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்த தினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கு ஏதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்." (1 பேதுரு 1:3–4)" அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, (மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து), இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது." (1 பேதுரு 3:21) "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டு கொள்ளுவதில்லை" (ரோமர் 6:9). "கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்து மிருக்கிறார்." (ரோமர் 14:9).

கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் அவருடைய இரத்தம் சிந்தப்பட்டு, அதன் காரணமாக மனிதர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. (மத்தேயு 26:28; எபே. 1:7) கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஒருவர் கீழ்ப்படிவதின் மூலம் அந்த இரத்தத்தோடு அவர் தொடர்பு கொள்ளுவதால், அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, அல்லது கழுவப்படுகின்றன. (அப். 2:38; 22:16). இது எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப்பற்றி விவரமாக அடுத்து வரும் பாடங்களில் காண்போம்.

கர்த்தரின் உயிர்த்தெழுதலால், அவர் இன்றும் ஜீவிக்கிறார் என்பதை நாம் அனைவரும் நிச்சயமாக அறியக்கடவோம். அவரைப் பின்பற்றும் அவருடைய கீழ்ப்படிதலுள்ள மக்களாக நாமும் வாழுவோம். விளைவாக நித்தியத்தில் என்றென்றும் தொடர்ந்து அவரோடு வாழுவமோம்.

**J.C. Choate** **எஸ்.எஸ். ராஜன்**

**ஏப்ரல் 1997**

பெண்கள் பகுதி

# விருந்தினரை உபசரிப்பதில் பெண்களின் பெரும் பங்கு

“அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரை யும் உபசரித்ததுண்டு”. (எபி. 13 : 2) பிறரை உபசரிக்கும் குணமானது சுயநலமற்ற, மதிப்பிற்குரிய ஒரு செயலாக காலாகாலமாகக் கருதப்பட்டு வந்துள்ளது.

ஒரு நாள் மூன்று மனிதர்கள் ஆபிரகாமின் கூடாரத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். அவர் களைச் சந்திக்க ஆபிரகாம் ஓடிச் சென்று, அவர்களை நோக்கி, “எங்கள் மரத்தின் நிழலில் ஓய்வாகத் தங்கிச் செல்லுங்கள்” என்று கெஞ்சி அழைக்கிறார். பின்னர், அவர்களுக்கு உணவு படைத்திட தனது மனைவி சாராளிடம் பணித்தார். அவளும் ஆகாரத்தை சமைக்கும் பணியில் ஈடுபடலானாள். தனது மந்தைக்கு அவரே நேரில் சென்று, சிறந்த கன்றுக்குட்டி ஒன்றைத் தேர்ந் தெடுத்துக் கொண்டு வந்து,தமது வேலைக்காரனிடம் கொடுத்து, அதை பக்குவமாகச் சமைக்கச் சொல்லி அனுப்பினார். பின்னர், வெண்ணெய், பால், இறைச்சி யோடு அவர்களுக்கு விருந்து படைத்து, அவர்கள் சாப்பிடுவதை அருகில் நின்று கவனித்தார். (ஆதி.18).

அந்த முக்கியமான நாளிலே, ஆபிரகாம் கர்த்தருக் கும் (ஆதி. 18 : 13), மற்றும் இரண்டு தூதர் களுக்கும் (19 : 1) மனிதர்களின் பார்வையில், விருந்தளிப்பவராக இருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு, ஆபிரகாமும் சாராளும் அந்நாளில்காட்டிய அதே போன்ற உபசரிப்பை, கிறிஸ்த வர்களும் கடைபிடிக்க வேண்டும் என்று எபிரேய எழுத்தர் புதிய ஏற்பாட்டில் வற்புறுத்துகிறார்.

மற்றுமோர் சந்தர்ப்பத்திலே, தேவனின் தீர்க்கதரிசியாகிய எலிசா, “சூனேமுக்குப் போயிருக்கும் போது, அங்கேயிருந்த கனம் பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக் கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிற போதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்கு வான். அவள் தன் புருஷனை நோக்கி : இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனிதனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்.

நாம் மெத்தையின் மேல் ஒரு சிறிய அறை வீட்டைக்கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்து விளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்". (II இராஜாக்கள் 4 : 8 –10). அதன் பின், எலிசாவும் அவன் வேலைக் காரனாகிய கேயாசும் அவ் வழியாக செல்லும் போதெல்லாம் அந்த மேல் வீட்டின் அறையிலே தங்கிச் சென்றார்கள்.

ஒரு தீர்க்கதரிசியான எலிசா வின் வாழ்க்கை எளிதாக இருக்க வில்லை. அவருடைய சரீரத் தேவை கள் அவருக்கு அளிக்கப் பட்டிருக் கவில்லை என்பதை அந்த சூனே நாட்டுப் பெண்மணி கவனித் திருந்தாள். சிலவேளை களில் அவருடைய உயிருக்கே அந்நாட்டுக் குருக்களாலும், இஸ்ர வேலின் அரசியல் எதிரி களாலும் ஆபத்தான நிலை இருந்தது என்பதை அறிந் திருக்கக்கூடும். 2 இராஜாக்கள் 6 : 1–23 வசனங்களில் பதிவு செய்துள்ள படி, சீரியாவின் இராஜாஎலிசாவைக் கொல்லத் திட்டமிட்டிருந்தான்.

ஆனால், அந்த சூனே நாட்டுப் பெண்மணியின் இரக்க முள்ள இதயமானது எலிசாவின் துன்பங்களை அறிந்து அவருக்கு உதவ முன் வந்தது. அவ்வழியாக எலிசா செல்லும் போதெல்லாம் அவருக்கு உணவளித்து உபசரித் தாள். அவனுக்கென்று ஒரு அறை யை ஒதுக்கி, அதில் வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தாள்.

அந்த சூனே நாட்டுப் பெண்மணி தெய்வ பயமும் உபசரிப் பதில் சிறந்தவளாக இருந்தது மல்லாமல், தேவ ஏவுத லால் இராஜாக்களின் புத்தகத்தை எழுதி யவர் குறிப்பிடுவது போல, "கனம் பொருந்திய" பெண்ணாக இருந்தாள். எவ்வளவு பாராட்டுக் குரிய வார்த்தை கள் அவை; இன்று தேவனுடைய குடும்பத்திலுள்ள பெண்களாகிய நாம், நமது சொந்த வாழ்க்கையில் வளர்த்துக் கொள்ள வேண்டிய குணநலன்களைப் பற்றி அவை விவரிக்கின்றன.

அந்த சூனே நாட்டுப் பெண்மணியைப் பற்றி நாம் வேறு என்ன தெரிந்து கொள்ளுகிறோம்? அவள் அடக்கமான பெண். அவளுடைய சிறப்பான அன் புள்ள காரியங்களுக்கு ஈடாகத் தான் என்ன செய்யட்டும் என்று கேட்க எலிசா அவளிடம் ஆள னுப்பிய போது, அப்பெண்மணி எலிசாவின் அறைக்குள் பிரவே சித்து அவருடைய தனிமைக்கு இடையூறு செய்யவில்லை. 2 இரா ஜாக்கள் 5 : 15ம் வசனம் கூறுகிறது : "...அவளைக் கூப்பிட்டபோது அவள் வந்து வாசற்படியிலே நின்றாள்" எவ்வளவு அடக்கத்தை யும் ஞானத்தையும் அவளுடைய குணத்திலே நாம் காண்கிறோம்!

**திருமறை ஆசான்**

தேவனிடத்தில் மிகப்பெரிய நம்பிக்கையையும் தேவனுடைய மனிதனாகிய எலிசாவின் வல்லமையையும் நாம் பார்க்கிறோம். எலிசாவின் தீர்க்க தரிசனத்தின்படி, அவளுக்கு ஒரு மகன் இருந்தான் (2 இராஜாக்கள் 4 : 17) காலப்போக்கிலே சடிதியில் சுகவீனப்பட்டு அவன் மடிந்து போனான் என்பது உண்மையாயிற்று. அப்பெண்மணி என்ன செய்தாள்? அவளுடைய துயரத்திற்காக அழுது புரண்டாளா? இல்லை. தேவனுடைய மனிதனைக்காண இந்த எதிர்பாராத வேளையிலே ஏன் புறப்பட்டுப் போகிறாய் என அவளது கணவன் கேட்ட போது கூட, "எல்லாம் சரிதான்" (2 இராஜாக்கள் 4 : 23) என்று அவள் பதிலளித்தாள். அதிக விசுவாசமுள்ள ஒரு பெண்மணியாக அவள் காணப்பட்டாள்.

இன்று கிறிஸ்தவ பெண் மணிகளில், தெய்வ பயமிக்க ஒரு வாழ்க்கையின் சக்தி நம்மைச் சுற்றியுள்ளோரை வசீகரிக்கும். பெருந்தன்மை, உபசரிப்பு, சுயநல மின்மை, அடக்கம், விசுவாசம் போன்ற நற்குணங்களை நம்மில் பிறர் காணும்போது தேவனுடைய வழியில் அவர்கள் ஈர்க்கப் படுவார்கள்.

**B.B.** சோட்,

**R.R.** நாயகம்

# அப்போஸ்தலன் யோவான்

*இவரை அன்பின் சீஷன் யோ 21 : 20 25*

*மூப்பராகிய யோவான் I யோ 2*
*III யோ 1*

*என்று அழைக்கப்பட்டார். இவர் செபுதேயுவின் குமாரன்*

*இவர். புதிய ஏற்பாட்டில், யோவான் சுவிசேஷம். I II III யோவான் வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய 5 புஸ்த்தகங்களை எழுதியுள்ளார்.*

# நீங்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?

உங்களுடைய சொந்த இரட்சிப்பு, இவ்வுலகில் மிகவும் முக்கியமான காரியமாகும். தான் இரட்சிக்கப்பட்டதாக நினைத்து, உண்மையிலேயே அது தவறாக இருப்பின், அதைப் போன்ற ஈடு செய்ய இயலாத இழப்பு வேறிருக்க முடியாது.

ஒரு மனிதன் தனது இரட்சிப்பைப் பற்றி நிச்சயமாக இருக்க முடியுமா? ஆம்! ஆனால் . . .

1. **தனது உணர்வுகளால் அல்ல.** ஒருவனுடைய உணர்வுகள் அவனை ஏமாற்றி விடக் கூடும். தனது அன்புமிக்க குமாரன் யோசேப்பின் மரணத்திற்காக துக்கப்பட்டுக் கொண்டிருந்தாள் யாக்கோபு. (ஆதி. 37 : 35). ஆனால் அச்சிறுவன் உயிரோடிருந்தான், மரிக்கவில்லை. கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதையே தனது தொழிலாகக் கொண்டிருந்த போது, பவுல் நல் மனசாட்சியுடனே தான் வாழ்ந்தார். (அப். 23 : 1). நம்ப இயலாத "மனித மனசாட்சியின் உணர்வுகளுக்கு", மிகவும் முக்கியமான நமது இரட்சிப்பை பலியிட முடியாது. பாவ மன்னிப்பு தேவனுடை மனதில் தோன்றுகிறதே தவிர, மனிதர்களுடைய நெஞ்சுக் கூட்டிலிருந்து அல்ல.

2.**மனிதர்களுடைய வார்த்தைகளால்** அல்ல. தங்களுடைய இனிமையான பசப்பு வார்த்தைகளால், அறியாத மக்களின் இருதயங்களை கள்ளப் போதகர்கள் ஏமாற்றி விடுகின்றனர். (ரோமர் (16 : 17). நாமகரண சபை போதகர்களிடம் நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு வித்தியாசமான பல பதில்களை நீங்கள் பெற முடியும். இயேசு கூறினார் : " .... குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்கள்" (மத். 15 : 14)

3. **நாம் எப்போது மன்னிக்கப்படுகிறோம் என்பதை தேவன் மட்டுமே நமக்கு கூறமுடியும்!** மனிதனுக்கு தேவன் அளிக்கும் ஒரே செய்தி வேதாகமம் மட்டுமே. "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்" என பவுல் கூறுகிறார். (ரோமர் 8 : 16)இது எப்படி நடக்கிறது? நமது வேதாகமத்தை எழுத தேவனுடைய ஆவி அப்போஸ்தலர்களை ஏவினார். (2 பேதுரு 1 : 20-21). இரட்சிப்பு அடையத்

தேவையான நிபந்தனைகளை ஆவியானவர் சுவிசேஷத்தில் தந்துள்ளார். அவற்றின்படி நடந்து கொள்ளும் மனிதன் தேவனுடைய பிள்ளை என அறிவிக்கப்படுகிறான். அவற்றை நாம் கடைப்பிடித்திருந்தால் நமது ஆவி அல்லது மனம் இந்த நிபந்தனைவிடப் படித்து தீர்மானிக்க இயலும். ஒருவன் தேவனுடைய நிபந்தனைகளின்படி நடக்கும்போது அவன் இரட்சிக்கப்படுகிறான்.

**இரட்சிப்பின் நிபந்தனைகள்**

**தேவனுடைய ஆவி கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிட்டுள்ளது :**

1. **விசுவாசம்** இன்றி ஒருவன் தேவனை பிரியப்படுத்துவது கூடாத காரியம். (எபி. 11 : 6).
2. எங்கும் உள்ள மனிதர்கள் எல்லாரும் **மனந்திரும்ப வேண்டும்** என தேவன் கட்டளையிடுகிறார். (அப். 17 : 30).
3. இரட்சிப்பு உண்டாக வாயினாலே **அறிக்கை பண்ணவேண்டும்.**
4. திருமுழுக்கு இப்பொழுது நம்மையும் **இரட்சிக்கிறது.** (1 பேதுரு 3 : 21)

மேலே காணும் காரியங்களை, தேவன் கூறிய மாதிரியே நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்று உங்கள் ஆவி (மனது) ஒப்புக் கொள்ள முடியுமா? இல்லையென்றால் நீங்கள் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. ஆம் என்றால், நீங்கள் இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்கள் என்பதில்ச்சயமாக இருங்கள்; மரண பரியந்தம் விசுவாசமுள்ளவராக வாழ்ந்து, ஜீவகிரீடத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். (வெளி. 2 : 10).

**J.C. சோட்.**

## இரண்டு வழிகளும் அதன் முடிவுகளும்

*நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்,*

*துன்மார்க்கருடைய பாதையோ இருளைப் போல் இருக்கும். தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள்.*

**நீதி 4:18,19.**

# குழந்தைகளுக்கு திருமுழுக்குத் தேவையா?

“எல்லாரும் செய்கிறார்கள், எனவே நாங்களும் இதைச் செய்கிறோம்” என்பதே குழந்தைகளுக்கு திருமுழுக்குக் கொடுக்கும் பலருடைய வாதமாக இருக்கிறது. குழந்தை பிறந்த சில நாட்களுக்குள் செய்ய வேண்டிய மிக முக்கியமான ஒரு மதச்சடங்கு இது என்று அவர்கள் நம்புகின்றனர். இப்பழக்கம் எப்போது தொடங்கிற்று? வேதாகமத்தைப் பொருத்த வரை, ஒரு குழந்தை திருமுழுக்குப் பெற்றதாக ஒரு முன்னுதாரணமோ, அல்லது குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கட்டளையோ அதில் காணப்படவில்லை. எனவே, இப்பழக்கம் தொடங்கியது எப்படி? சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக, குழந்தைகள் பாவத்தில் பிறப்பதாக, பாவ நிலையில் நீடிப்பதாக, இயற்கையாகவே பெற்றோர்கள் பாவத்தில் மூழ்கியுள்ள காரணத்தால் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட ஜென்ம பாவத்துடன் பிறப்பதாக சில மக்கள் போதிக்கத் தொடங்கினர். ஆதாமிடமிருந்து பெற்றுக் கொள்ளும் ஆதி பாவங்கள் குழந்தை திருமுழுக்குப் பெறும் போது, நீங்கிப் போகிறது என்று அவர்கள் கூறினார்கள். ஜென்ம பாவம் என்ற கோட்பாட்டை நியாயப்படுத்த, சிறு குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள் என கிறிஸ்து கட்டளையிட்டி ருப்பதால், குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுத்து, நாங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறோம் என அவர் போதிக்கத் தொடங்கினர். மேலும், மோசேயின் பழைய ஏற்பாட்டுச் சட்டத்தின்படி, குழந்தைகளுக்கு விருத்தசேதனம் எவ்வாறு செய்யப்பட்டதோ அதே போன்று புதிய ஏற்பாட்டின்படி விசுவாசத்தின், நீதியின் முத்திரையாக குழந்தைகள் திருமுழுக்குப் பெற வேண்டும் என்று அவர்கள் உபதேசித்தனர்.

ஆனால் வேதாகமம் போதிப்பது என்ன? திருமுழுக்குப் பெற வேண்டியது யார்? ஒருவன் ஏன் திருமுழுக்குப் பெற வேண்டும்? திருமுழுக்கு என்றால் என்ன? முதல் முதலாக, ஜென்ம பாவம் என்பதாக ஒன்று இல்லை. வேதாகமத்தில் ஒரு இடத்திலும் அதைக் காண முடியாது. எசேக்கியேல் 18ம் அதிகாரம் 20ம் வசனத்தில் நாம் படிக்கிறோம் : **“பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச்**

*திருமறை ஆசான்*

**சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன் மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல் தான் இருக்கும்''**. இது தெளிவாக இருக்கிறதா? ஆனால் சங்கீதம் 51 : 5ம் வசனத்தில் தாவீது சொல்லியிருப்பதை யாரோ இங்கே உடனே குறிப்பிட விரும்புகிறார்கள் : "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்''. கவனியுங்கள் : யார் தாவீதை உருவாக்கியது? மேலும், யார் தாவீதை கர்ப்பந்தரித்தார்? மேலே சொன்ன இரண்டு கேள்விகளுக்கும் விடை : தாவீதின் தாய் தான். இங்கே, தன்னைப் பற்றிச் சொல்லவில்லை; தாவீது தனது தாயைக் குறிப்பிட்டுச் சொன்னான்.

மீண்டுமாக, சிறு குழந்தைகளை தன்னிடத்தில் வர விடுங்கள் என கிறிஸ்து கட்டளையிட்டிருந்த போது, அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பதற்காக அவர்களை அவரிடத்தில் அழைக்கவில்லை. தங்களுடைய குழந்தைகளுக்காக ஜெபம் செய்ய கிறிஸ்துவிடத்தில் பெற்றோர்கள் அவர்களைக் கொண்டுவர விரும்பினார்களே தவிர திருமுழுக்குப் பெற அல்ல, என்பதைக் காண்கிறோம். ஆனால், சிறு குழந்தைகளைக் கொண்டு வர வேண்டாமென்று அவருடைய சீடர்கள் பெற்றோர்களைக் கடிந்து கொண்டனர். கிறிஸ்துவோ அவர்களிடம் சொன்னார் : "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது''. சிறு குழந்தைகளிடம் பாவமில்லை என்பதை இது நிரூபிக்கவில்லையா? நிச்சயமாக. ஏனென்றால், "பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது'' என்று கிறிஸ்து கூறினார். உண்மையில், மற்றொரு சந்தர்ப்பத்தில் தமது சீடர்களிடம் கிறிஸ்து, "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று சொல்லியிருந்தார். (மத். 18 : 3).

சிறு குழந்தைகள் பாவமற்றவர்கள். அவர்கள் பரிசுத்தமாகவும், களங்கமில்லாதவர்களாகவும் இருக்கின்றனர். எனவே தான் "பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது'' என கிறிஸ்து சொன்னார். அவர்கள் பாவிகளாக இருப்பின், கிறிஸ்து அப்படிச் சொல்லியிருக்கமாட்டார். பாவமற்றவர்களுக்காக கிறிஸ்து சிலுவையில் மரிக்கவில்லை; மாறாக, பாவிகளுக்காகவே அவர் மரித்தார். அவருடைய மரணம், அடக்கம், உயிர்ப்புக்குப் பின்னர், இயேசு தமது சீடர்களை நோக்கி, "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ

ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்'' என்று கட்டளையிட்டிருந்தார். (மாற்கு 16 : 15, 16, லூக்கா 13 : 3, 5).. சிறு குழந்தைகளுக்குப் போதிக்க முடியாது; அவர்களுக்குப் புரிந்து கொள்ள இயலாது, அல்லது அவர்கள் விசுவாசிக்கவோ, மனஸ்தாபப்பட்டு திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளவோ முடியாது. நற்செய்தி போதிக்கப்படுவதை புரிந்து கொள்ளும் சக்தியும், விசுவாசித்து, நீங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படக் கூடியவர்களாகவும் உள்ள எல்லா பெண்களுக்கும், ஆண்களுக்குமே (குழந்தைகளுக்கு அல்ல) திருமுழுக்கு உரியது. மாறாக, பழைய ஏற்பாட்டின்படியான விருத்த சேதனம் ஆண் குழந்தைகளுக்கு மட்டுமே உரிய சடங்காகும். திருமுழுக்கைப் போல, இரட்சிப்புக்காக விருத்தசேதனம் செய்யப்படுவது இல்லை. ஆனால், ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும், தேவனுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடையாளமே விருத்த சேதனம். (ஆதி. 17 : 11, 12). அடுத்து, ஒரு முக்கியமான காரியத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, திருமுழுக்கு என்றால் தெளிப்பது அல்ல, ஆனால் அது தண்ணீரில் முழுக்குவது. குழந்தைகளுக்கு "திருமுழுக்கு" கொடுப்பவர்கள். அவர்கள் தலைகளில் சிறிது தண்ணீரைத் தெளித்து விடுகிறார்கள். (நமது கலாச்சாரத்தின்படி, 'அவனுக்கு தண்ணீர் தெளித்து விட்டேன்' என்று ஒருவனைப் பற்றிக் கூறினால் அதற்குப் பொருளே வேறு!). தயவு செய்து உங்கள் வேதாகமத்தில் ரோமர் 6 : 3 – 5; அப். 8 : 35–39; கொலோ. 2 : 12 ஆகிய வசனங்களைப் படியுங்கள்.

மனிதனிடமிருந்து தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை நீங்கள் வேதாகமத்திலிருந்து விசுவாசித்தால், நீங்கள் என்ன செய்ய வேண்டும் உங்களுடைய சிறு குழந்தைகளிடம் கர்த்தருக்குப் பயந்து நடக்கச் சொல்லுங்கள் (எபே. 6 : 4). நீங்கள் குழந்தைகளாக இருந்தபோது, "திருமுழுக்கு" பெற்றிருந்தால், உங்கள் சார்பாக அதைச் செய்தவர்களின் அறியாமையான செயலின் விளைவாக அதைக் கருதுங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் இப்போது கிறிஸ்துவை விசுவாசியுங்கள்; சகல அறியாமைகளிலிருந்தும் மனந்திரும்பி (அப். 17 : 30) உங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று திருமுழுக்குப் பெறுங்கள். இவ்வாறே அப். 2 : 38ம் வசனம் கூறுகிறது. அப்படி நீங்கள் செய்யும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய ஆவிக்குரிய சரீரமாகிய, அவருடைய ராஜ்யத்தில், அவருடைய வீட்டில் அதாவது, அவருடைய சபையில் உங்களைச் சேர்த்துக் கொள்ளுவார். (அப். 2 : 47; 1 கொரி. 12 : 27; எபே. 1 : 22, 23; மத். 16 : 18, 19; 1 தீமோ. 3 : 15).

**Sunny David** **எஸ்.எஸ். ராஜன்**

*திருமறை ஆசான்*

# பாவம்

தேவனுடைய கற்பனையை மீறுவதே பாவம் என்று வேதம் கூறுகிறது. இந்த உலகம் பாவத்தால் நிறைந்திருந்தது. அன்று இன்றும், நல்லவன் ஒருவனும் இல்லை என்று வேத வசனம் கூறுகிறது. இத்தருணத்தில் பிதாவாகிய தேவன் குறித்தபடி அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். பாவம் மனிதனை விட்டு விலக நல்ல வழியை போதித்தார். கிறிஸ்துவின் போதனைக்கு கீழ்ப்படிந்தவர்கள் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டார்கள் அன்றும் இன்றும். அவ்வாறு கிறிஸ்துவின் போதனைக்கு கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்ட மக்கள் திரும்பவும் பாவம் செய்யலாமா? கூடாதே என்று வேதம் கண்டிப்பாய் கூறுகிறது. இனி பாவம் செய்யாதே என்பது தேவனின் கட்டளை. ஒரு தரம் பாவத்திலுருந்து விடுபட்ட நாம் திரும்ப பாவமான செயல்களுக்கு உடன்படலாமா? கூடாது கூடாது என்று வேதம் எச்சரிக்கிறது. திரும்ப பாவத்துக்குள் சென்ற கிறிஸ்தவர்களை நாய்க்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி மீண்டும் சேற்றிலே புரண்டது போலாகும் என்று கடுமையாக எச்சரித்திருக்கிறது. பாவம் செய்தவர்கள் பிசாசினால் உண்டானவர்கள், தேவனால் பிறந்தவன் பாவம் செய்யான் என்றும் வசனம் கூறுகிறது. பாவத்துக்கு ஞானஸ்நானத்தின் மூலம் மரித்த நாம் திரும்பவும் பாவம் என்னும் அடிமைத்தனத்திற்கு செல்லலாமா? பாவம் நம்மை தேவனிடத்திலிருந்து பிரித்துவிடும். தேவ்ன் பாவத்தை (தீமையை) பார்கக் கூடாத சுத்தக் கண்ணன் என்று வேதம் கூறுகிறது. இன்று சிலர் தாங்கள் செய்து வரும் பாவத்தை சரியென்று நிரூபிக்க இந்த வசனத்தை சாதகமாக பயன்படுத்துகிறார்கள். நமக்குப் பாவமில்லையென் போமானால நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் சத்தியம் நமக்குள் இராது. யோவான் எழுதிய நிருபங்கள் யாவும் பாவத்தைக் கண்டிக்கிறது : யோவான் இரண்டு விதமான பாவத்தை குறிக்கிறார் மரணத்திற்கு ஏதுவான பாவம். பாவத்தின் சம்பளம் மரணம். ரோமர் 1. 28–32; கலாத்தியர் 5. 19–21 வரை வாசிக்கவும். இந்த வசனங்களில் குறிப்பிட்ட பாவங்களைச் செய்பவர்களை புதுப்பிப்பது கூடாத காரியம். திரும்ப திரும்ப அதே பாவங்களைச் செய்வார்கள். மரணத்திற்கு ஏதுவில்லாத பாவம். அப்படிப்பட்ட பாவங்கள் யாவை என்று கேட்பவர்களுக்கு தேவனுடைய பதில். ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்கு பாவமாயிருக்கும்; தீய நோக்கம், எண்ணம், சிந்தனை பாவம். ஒரு ஸ்திரீயை தன் இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று. இச்சை பாவம் என்று கிறிஸ்து

கூறினார். பண ஆசையே எல்லா தீங்குக்கும் வேர். பணத்தில் மேல் உள்ள பேராசை, பாவம். தனக்கென்று மேலும் மேலும் சேர்த்து வைப்பது பாவம். பிறருக்கு உதவி செய்யமாட்டார்கள் அது பாவம். தேவனை அறிந்திருந்தும் அறியாதது போல் நடிப்பது பாவம். உலகத்திலுள்ள பொருள்களை தனக்கென்று இச்சிப்பது பாவம். கிறிஸ்தவன் உலகத்திற்கொத்த வேஷம் போடுவது பாவம். கிறிஸ்தவன் தன்னை கிறிஸ்தவன் என்று சொல்ல வெட்கப்படுவது பாவம்; லஞ்சம் வாங்க நினைப்பது பாவம்: தன்னைப் போல் பிறனை நேசியாதது பாவம். நாம் மனதில் நினைத்தோம் ஆனால் செய்யவில்லை. இப்படிப்பட்ட மரணத்திற்கு ஏதுவில்லாத பாவத்தை தேவனிடத்தில் கூறி மன்னிப்பைப் பெற முடியும். இந்த விதமான பாவங்களுக்கே கிறிஸ்து மத்தியஸ்தர்; நமக்காக பிதாவினிடத்தில் வழக்காடுகிறார். மரணத்திற்கு ஏதுவான பாவத்திற்கு கிறிஸ்து வழக்காடுவதில்லை. இவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை.

**S.M. ஞானம், மலேசியா**

# "இருதயம்"

இருதயத்தை தொடாது அல்லது மாற்றாத எந்தவொரு உபதேசமும் கிறிஸ்துவின் உபதேசமல்ல.

பாவம் நிறைந்த இருதயத்திலிருந்து அசுத்தமும் அந்தகாரமுமே வெளிப்படும். (மத் 15 : 19).

ஊற்று சுத்தமாயிருந்தால் அதிலிருந்து சுரக்கும் தண்ணீரும் சுத்தமாயிருக்கும்.

மாமிசத்துக்குரிய இருதயம் : இரத்தத்தை சுத்தம் செய்கிறது. இதில் ஒருவன் குத்தப்பட்டால் அவன் மரித்துப் போவான். (உ.ம்) II சாமு18:14ல் யோவாப் நான் இப்படி உன்னோடே பேசி, தாமதிக்கமாட்டேன் என்று சொல்லி தன் கையிலே மூன்று வல்லயங்களை எடுத்துக்கொண்டு அப்சலோம் இன்உம் கர்வாலி மரத்தின் நடுவிலே உயிரோடே தொங்குகையில் அவைகளை அவன் நெஞ்சிலே குத்தினான் (And he took three staves in his hand. and thruot them through he heart of Absolom) அவன் இறந்து போய்விடுகிறான். இந்த மாமிசத்துக்குரிய இருதயத்தைப் பற்றி நான் பேச எனக்கு தகுதியில்லை. காரணம் நான் டாக்டருக்குப் படிக்கவில்லை.

*திருமறை ஆசான்*

ஆவிக்குரிய இருதயம் : அப். 2 : 37ல் 'இதை அவர்கள் கேட்ட பொழுது இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி" இது ஆவிக்குரிய இருதயம் இதில் குத்தப்பட்ட பொழுது ஆத்துமா கிறிஸ்துவில், உயிர்மீட்சி அடைகிறது. பரிசுத்த வேதாகமம் இந்த ஆவிக்குரிய இருதயத்தைப் பற்றி தெளிவாக நமக்குப் போதிக்கிறது.

**a. இருதயம் என்றால் என்ன?**

எவைகளையெல்லாம் நாம் அறிவு (ந்நூபூதிநீநீதித்பூ) என்று சொல்லுகிறோமோ அதுவே இருதயமாகும். இந்த மனிதன் இந்த அறிவைக் கொண்டு தான் யோசிக்கிறான்.

மத் 9 : 4 –ல் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளை சிந்திக்கிறதென்ன? என்று இயேசு கேட்கிறார்.

b. எவைகளை நாம் "உணர்ச்சி" (Emotion) என்று சொல்லுகிறோமோ அதுவே இருதயம் இருதயத்தில் என்று அவமதித்தாள் (Dospise) (IIசாமு 6 : 16) இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே என் விருப்பம் (Desire) (ரோமர் 10 : 1) அன்பு (Love) செலுத்து (மத் 22 : 37).

c. எவைகளை நாம் மன உறுதி (Will) என்று சொல்லுகிறோமோ அதை வேதாகமம் இருதயம் என்று அழைக்கிறது. "தன் இருதயத்தில் உறுதியுள்ளவனாகவும்", (I கொரி 7 : 37) இந்த இருதயம் கிறிஸ்துவில் மாற்றம் பெற வேண்டும்.

எப்படி இந்த இருதயம் மாற்றப்பட வேண்டும்?

அறிவு பூர்வமாய், உணர்வு பூர்வமாய், மன உறுதியோடு இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும். அறிவு என்பது ஒரு சான்றினாலே ஏற்படுவது.

(உ.ம்) தோமாவுக்கு ஏற்பட்டது யோவான் 20 : 24, 29, 31
The will is changed by motives Produced by faith.)
கீழ்ப்படிதலை கற்று பூரணரானார் (எபி 5 : 9)
(a motive belief in the reward of the obedience)

ஜீவபுத்தகத்தில் எழுதப்படாதவன் அக்கினி கடலிலே தள்ளப்பட்டான் (வெளி 20 : 15).

(a motive belief in the punishment of the disobedient)

ஒருவன் கிறிஸ்துவுக்கு (ஆரோக்கியமான உபதேசத்துக்கு) கீழ்ப்படிவதன் மூலம் பாவத்திலிருந்து விடுதலையடைந்து நீதிக்கு அடிமையாக முடியும் (ரோமர் 6 : 17) இருதயத்தில் கீழ்ப்படிதலில்லாத எந்தவொரு மனுஷனும் கிறிஸ்துவுக்கு பிரியுமாயிருக்க முடியாது.

**V. தானியேல், துரைராஜ், திருச்சி.**

# 5. பிரசங்கியின் பிரசங்கப் பொருள்

பிரசங்கி எந்த வகைப் பிரசங்கமானாலும் பிரசங்கிக்கலாம். ஆனால் பிரசங்கத்திற்கு மூலப் பொருள் வேதத்திலிருந்தே இருக்க வேண்டும். பிரசங்கி பிரசங்கப் பீடத்தில் நிற்பது பொழுது போக்குவதற்கு அல்ல! முக்கியமான சத்தியங்கள் நிறைந்த கருத்தாழம் மிக்க பிரசங்கத்தை பிரசங்கிக்கவே பிரசங்க பீடத்தில் நிற்க வேண்டும். செவிக்கு இன்பமான பயனற்ற பல வார்த்தைகளைச் சொல்லிவிட்டு இறங்குவதல்ல! பொருள் நிறைந்த பிரசங்கத்தையே சொல்லிவிட்டு இறங்க வேண்டும்.

பிரசங்கத்திற்கு பொருட் சிறப்பு இல்லையானால் வேறெந்த சிறப்புகள் இருந்தாலும் அவை உபயோகமற்றவை. பிரசங்கி சொற்சாதுரிய முள்ளவனானாலும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை தெளிவாய் சொல்லா விட்டால் அவன் சொல்வதெல்லாம் பதர் போல் இருக்கும். விதைக்கிற வனுடைய கூடை எவ்வளவு அழகாய்இருந்தாலும் அதில் விதை இல்லையானால் விதைப்பதெப்படி? ஒவ்வொரு பிரசங்கியும் விதைக்கிற வனாய் இருக்கிறபடியால் விதையைக் குறித்து அதிக அக்கறை உள்ளவனாயிருக்க வேண்டும். (லூக்கா 8 : 5,11) தேவனுடைய கிருபை சுவிசேஷத்தினாலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடியால் சுவிசேஷத்தைப் பற்றிய உபதேசம் இல்லாத சாதுரிய பிரசங்கம், வறண்ட நிலத்துக்கு மழை வருஷியாமல் கடந்துபோகிற மேகத்துக்குச் சமம். பிரசங்கி எப்பொழுது பிரசங்கித்தாலும் சுவிசேஷத்தைச் சொல்லாமல் பிரசங்க பீடத்திலிருந்து இறங்கலாகாது.

பிரசங்கி தனது பிரசங்கத்தில் வேதவசனங்களை கோர்வையாய் நிரப்பவேண்டும். அது பிரசங்க வாக்கியத்திற்கு இயற்கையாய் எழும்பி இருக்க வேண்டும். பிரசங்க வாக்கியத்திற்கு சம்பந்தமாக வசனங்கள் எழும்பியிருக்க வேண்டும். தனது பிரசங்கப் பொருளை உணர்த்துவதாக வசனங்கள் இசைவாயிருக்க வேண்டும். பிரசங்கப் பொருளை உணர்த்தாமல் சம்பந்தமில்லாத வசனங்களை நிரப்புவது வெவ்வேறு வயல்களுக்கும் புதிய, புதிய மேய்ச்சலுக்கும் புறப்பட்டு போகிறவர்களைப் போல பிரசங்கமும் இருக்கும். தான் தெரிந்து கொண்ட பிரசங்கப் பொருள் மக்களுக்கு மறைந்து பிரசங்கியார் எதைக் குறித்து பிரசங்கிக்கிறார் என சந்தேகத்துடன் அமர்ந்து பிரசங்கத்தை கவனிக்கமாட்டார்கள்! ஆகவே பிரசங்கி தான் தெரிந்துகொண்ட பிரசங்கப் பொருள் கேட்போரின் மனதில் புச்ச மரத்தில் ஆணி அறைந்தாற்போல் பதிய வேண்டுமானால் அதற்கேற்ற வசனத்தை கோர்த்து பிரசங்கிக்க வேண்டும்.

***திருமறை ஆசான்***

பிரசங்கத்திற்கு அஸ்திபாரம் வேத வசனங்களே! பிரசங்கியின் பிரசங்கங்கள் சிறந்த போதனையும், முக்கிய சத்தியங்களும் நிறைந்திருக்க வேண்டும். மனிதனுடைய பாரம்பரியங்கள், மனிதனுடைய போதனை, கட்டுக் கதைகள் போன்றவற்றை அஸ்திபாரமாகக் கொண்டு பிரசங்கத்தை கட்டுவோமாகில் தேவ கோபாக்கினைக்குத் தப்பமுடியாது. இப்படிப்பட்ட போதனைகள் வேரோடு பிடுங்கப்படும். (மத் 15 : 13). ஆகவே நாம் நமது பிரசங்கத்தை புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல வேத வசனங்களை அஸ்திபாரமாகக் கொண்டு கட்டுவோமாக!

பிரசங்கியின் பிரசங்கம் மறைபொருளாயிராமல் வெளியரங்கமாக இருக்கவேண்டும். சத்தியத்தை ஒன்றையும் மறைத்து, ஒளித்து வைக்க வேண்டாம். "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய் தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்துகிறது "(ரோமர் 1 : 18 இப்படி மறைத்தும், தினத்தும் போதிக்கிற ரோம கத்தோலிக்க குருக்களையும். (C.S.I. குருக்களையும், பெந்தகொஸ்தே பாஸ்டர்களையும் பின்பற்ற வேண்டாம். நமது ஆண்டவரையும், அப்போஸ்தலரையும் பின்பற்றுவோமாக. (யோவான் 7: 16 –18, அப் 20 : 20, 21).

பிரசங்கத்தை அநேக வசனங்களைக் கொண்டு நிரப்புவது நல்லதல்ல. எல்லா சத்தியங்களையும் ஒரே பிரசங்கத்தில் அமைக்கக் கருதவேண்டாம். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதை மறக்க வேண்டாம். ஒரு பிரசங்கம் முப்பது நிமிடத்தில் முடிக்க வேண்டும். ஆதலால் அதற்கேற்றார் போல வசனங்களை ஆயத்தம் செய்ய வேண்டும். குறைந்தது இருபது வசனங்கள் அதிகபட்சம் முப்பது வசனங்கள் இருந்தால் போதுமானது. கேட்கிறவர்கள் இன்னுங்கொஞ்சம் கேட்க வேண்டும் என்ற வாஞ்சையோடல்ல. இந்தப் பிரசங்கம் கேட்டது போதும் என்கிற வெறுப்பாடே வீட்டுக்குப் போகாமல் கேட்கவேண்டும் என்கிற வாஞ்சையை எழுப்ப பிரசங்கத்தில் அளவுக்கு அதிகமான வசனங்களைக் கோர்க்காமல் அளவோடு கட்டுவோம். பிரசங்கக் கட்டிடம் நன்றாய் ஒழுங்கு செய்யப்பட்ட கோபுர மாளிகையாயிருக்கிறது. அப்படியானால் படிப்பினைகள் அடியிலும், கோபுர உச்சியிலும் இல்லை பிரசங்கமானது கோபுர மாளிகையின் மையப் பகுதியில் தான் படிப்பினைகள் உள்ளன. அதாவது பிரசங்கத்தின் பொருள் பதிக்கும் இடம் முன்னுரையிலும், முடிவுரையிலும் இல்லை. செய்தியிலே இருக்க வேண்டும். நமது பிரசங்கப் பொருளின் வசனங்களை செய்தி பாகத்தில் இணைத்து பிரசங்கிக்க வேண்டும்.

பிரசங்கியின் பிரசங்கப் பொருள் தெளிவானதாக இருக்க வேண்டும்.

தான் கற்ற தெளிவான சத்தியத்தையே தெரிந்து கொள்ள பிரயாசப்பட வேண்டும். கல்லாததையும், தெளிவில்லாததையும் பிரசங்கிக்க முற்பட்டால் நமது பிரசங்கத்தின் சாயம் பத்து நிமிடத்தில் வெளுத்துப் போய்விடும். ஆகவே கற்று நிச்சயத்தவைகளை பிரசங்கிப்போம். பிரசங்கங்களின் பொருள் கூடிய மட்டும் புதிதாய் இருத்தல் வேண்டும். வேத புத்தகத்தில் அடங்கியுள்ள சத்தியங்களும், போதனைகளும் ஏராளம். நாம் அவைகளைக் கருத்தாய் ஆராய்ந்து பார்த்து தேர்ந்தெடுக்க வேண்டும். நமது போதனைகள் நாளுக்கு நாள் தேறி வருவதாக. நமது அனுபவம் முதிரவே நமது போதனையும் முதிர்ந்து விடும். போதனையில் வளர வேண்டும் என்றால் திவ்விய சத்தியங்களைப் பற்றி நமக்கு உண்டாயிருக்கிற அறிவு காலம் செல்லச் செல்ல அதிக ஆழமும், உறுதியும் உண்டாயிருப்பது. எங்கே வேத வசன வளர்ச்சி உண்டோ அங்கே போதனை வளர்ச்சியும் உண்டு. பிரசங்கம் என்னும் பதத்திற்கு ஆங்கில பதம் செர்மன் (SERMON) இதன் பொருள், புகட்டுதல் அல்லது உருவாக்குதல் என்பதாகும். இந்த கருத்தின்படி நாம் தேர்ந்தெடுத்த பொருளைப் பலத்தோடும், பயன்படத்தக்க விதமாயும் மனதில் அழுத்துவது நமது நோக்கமாய் இருக்க வேண்டும்.

**K.பாஸ்கர், கோவில்பட்டி.**

# தேவனின் கட்டளைகள் ஐந்து

*1. என்மகனே, நீ என் வார்த்தைகளைக் காத்து, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து.*

*2. என் கட்டளைகளையும், என் போதகத்தையும் உன் கண்மணியைப் போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய்.*

*3. அவைகளை உன் விரல்களில் கட்டி, அவைகளை உன் இருதய பலகையில் எழுதிக்கொள்.*

*4. இச்சக வார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கு உன்னை விலக்கி காப்பதற்காக.*

*5. ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்றும், புத்தியைப் பார்த்து, நீ என் இனத்தாள் என்றும் சொல்வாயாக.*

***நீதி : 7:1- 5***

# ஒருவன் "மறுபடியும் பிறப்பது" சாத்தியமா?

"யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக் காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து . . . . . இயேசு பிரதியுத்தரமாக : ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்". (யோவான் 3 : 1 – 5).

"யோவான் (ஸ்நானகன்) காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங் கித்து : காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம சமீபமாயிற்று; மனந் திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்". (மாற்கு 1 : 14 – 15).

"யோவான் ஸ்நானகனைப் பற்றி இயேசு மக்களிடம் பேசினார் : "யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். பரிசேயர்களும் நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்". (லூக்கா 7 : 29 – 30). மனந்திரும்புதல், பாவங்களை மன்னித்தல், (தேவனுடைய) பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசித்தல் அனைத்தும் தண்ணீரில் முழுகிப் பெற்றிடும் திருமுழுக்குடன் சம்பந்தப்பட்டிருந்தன. (மத். 3 : 1 – 6). யோவான் ஸ்நானகனும் இயேசுவும் இதைப் போதித்துக் கொண்டிருந்தனர். (யோவான் 3 : 22 – 23). பலர் கீழ்ப்படிந்தனர். ஆனால், பரிசேயர்களோ அதைப் புறக்கணித்தனர்.

"பாவங்கள் மன்னிக்கப்பட, மனந்திரும்பி திருமுழுக்குப்" பெறும் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தைப் பற்றி, நிக்கொதேமுவிடம் இயேசு பேசியவைகளில் சில குறிப்புகள் இருக்கக் கூடும். ஆனால் அது பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கப்படவிருந்த (அப். 2ம் அதிகாரம்) "தேவனுடைய ராஜ்யத்திற்குள்" (சபை) பிரவேசிக்கத் தேவையான நிபந்தனைகளைக் குறிப்பிடுவதாக இருக்க அதிக வாய்ப்புகள் உண்டு.

தாம் கைது செய்யப்பட்டு, சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, "நான் என் சபையைக் கட்டுவேன்" என இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்திருந்தார். பேதுருவிடம் அவர் கூறும் போது : "....பரலோக ராஜ்யத்தின் திறவு கோல்களை நான் உனக்குத் தருவேன் ..." (மத். 16 : 18 - 19) என்று சொன்னார். பெந்தெகொஸ்தே என்னும் நாளிலே (சிலுவை மரணத்திற்கு ஏழு வாரங்களுக்குப் பின்) அப்போஸ்தலன் பேதுரு ராஜ்யத்தின் கதவைத் திறந்து, 'நீங்கள் நிச்சயமாக அறியக்கடவீர்கள்" (இயேசுவை விசுவாசியுங்கள்) "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே "(அவருடைய அதிகாரத்தினாலே), "மனந்திரும்பி" (தேவனிடம் திரும்பு), "ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (தண்ணீரில் முழுகி). அப்போது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் கொடைகளைப் பெற்றுக் கொள்ளுவீர்கள். (அப். 2 : 36 - 38).

"மீண்டும் பிறக்கவும்" தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கவும், நாமும் அவரை விசுவாசிக்க வேண்டும், அவரிடம் திரும்ப வேண்டும், பாவங்கள் மன்னிக்கப்படவும், பரிசுத்த ஆவியின் கொடைகளைப் பெறவும், ஆதி விசுவாசிகள் செய்தது போல (அப். 2 : 36 -47 நாமும் அவருக்குள் திருமுழுக்குப் பெற வேண்டும்.

**TIL** **எஸ். எஸ். ராஜன்**

## *கர்த்தர் தாங்குகிறார்*

*நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.*

*அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.*

*நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை.*

சங்கீதம் : 37 : 23 - 25

# சத்தியத்திலே நட

"என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை". – 3 யோவான் 4.

1. தேவன் சத்தியமுள்ளவர் (யோவான் 3 : 33). அவருடைய வசனமே சத்தியம். (யோவான் 17 : 17).
2. இயேசு கிறிஸ்து வார்த்தையாக இருக்கிறார், அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவர். (யோ. 1 : 14).
3. "சத்திய ஆவியானவர்" என்றும் பரிசுத்த ஆவியானவர் என்றும் அழைக்கப்படுகிறார். (யோவான் 14 : 17).
4. பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களை சத்தியத்தில் வழி நடத்தினார். (யோவான் 16 : 13).
5. அப்போஸ்தலர்களுடைய நற்செய்தி சத்தியம். (எபே. 1 : 13).
6. சத்தியத்தை நாம் அறியக்கூடும், அது நம்மை விடுதலையாக்குகிறது. (யோவான் 8 : 32).
7. இயேசு "வழியும், சத்தியமும், ஜீவனுமாக" இருக்கிறார். – (யோவான் 14 : 6).
8. சத்தியத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்குத் தேவனின் உக்கிர கோபாக்கினை வரும். – (ரோமர் 2 : 8).
9. சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிறவர்களுக்கு தேவனுடைய கோபாக்கினை வரும். (ரோமர் 1 : 18).
10. தேவனுடைய சத்தியத்தை நாம் பொய்களாக மாற்றக் கூடாது. (ரோமர் 1 : 25)
11. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகக் கூடாது. (2 தீமோ. 4 : 4).
12. சத்தியவான் எவனும் இயேசுவின் சத்தத்தைக் கேட்கிறான். – (யோவான் 18 : 37).
13. ஒவ்வொருவரும் சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். (1 தீமோத்தேயு 2 : 4).
14. தேவனுடைய சபை சத்தியத்தின் தூணும் ஆதாரமுமாக இருக்கிறது. ( 1 தீமோத்தேயு 3 : 15).

15. ஆவியோடும் உண்மையோடும் நாம் தேவனை ஆராதிக்க வேண்டும். (யோவான் 4 : 20).
16. நாம் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்க வேண்டும். (2 தீமோ. 2 : 15).
17. சிலர் எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கின்றனர். (2 தீமோத்தேயு 3 : 7).
18. துர் புத்தியுள்ள மனிதர்கள் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள். –2 (தீமோ. 3 : 8).
19. சத்தியத்தை அறிகிற அறிவு, தேவ பக்திக் கேதுவானது. – (தீத்து 1 : 1).
20. சத்தியத்தை விட்டு விலகுகிற மனிதர்களுக்கு செவி கொடாதே. – (தீத்து 1 : 13).
21. சத்தியத்தை அறிந்து ஏற்றுக் கொண்டபின், நாம் மனப்பூர்வமாக பாவம் செய்கிறவர்களாக இருக்கக் கூடாது. (எபிரேயர் 10 : 26).
22. நம்மை தேவன் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார். – (யாக்கோபு 1 : 18).
23. சத்தியத்தை விட்டு விலகிப் போகிறவர்களை திருப்பிக் கொண்டு வர முயற்சி செய்யவேண்டும் – (யாக்கோபு 5 : 19 – 20).
24. சத்தியத்திற்குக் கீழ்ப்படியும் போது, நமது ஆத்துமாக்கள் சுத்தமாக்கப்படுகின்றன. (1 பேதுரு 1 : 22).
25. நம்மை சத்தியத்திற்குரியவர்களாக்க நமது கிரியைகளினாலும் உண்மையினாலும் அன்புரக் கடவோம். (1 யோவான் 3 : 18 – 19).
26. சத்தியத்திலே நீ நடப்பதைக் கேள்விப்படும் போது மகிழ்ச்சி அடைகிறேன். (3 யோவான் 3 – 4).
27. சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்க உதவி செய். (3 யோவான் 8).
28. சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டிக் கொண்டு, உறுதியாக நில்லுங்கள். (எபேசியர் 6 : 14).

**TIL.** **தமிழில் : S.S. ராஜன்**

# பிசாசு ஒப்புக் கொள்ளுவதை நாத்திகன் மறுக்கிறான்.

"..... பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன" (யாக்கோபு 2 : 19) என வேதாகமம் கூறுகிறது. என்றபோதிலும், ஒரு நாத்திகன் அவ்வளவு தூரம் செல்லமாட்டான். அவன் கால அளவை நம்புவதில்லை! அவன் நம்பாததற்கு காரணங்கள் என்ன? சிலர் கூறுகின்றனர் :

1. "நான் கடவுளைக் காணமுடிவதில்லை; எனவே நான் அவர் இருக்கிறார் என்பதை நம்புவதில்லை".

   நாம் காண முடியாத பலவற்றை நம்புகிறோமே'. உதாரணமாக, அன்பு, வெறுப்பு, மின்சாரம் இத்தியாதி. . . .

2. "விஞ்ஞானிகளால் கடவுள் இருப்பதை நிரூபிக்க முடியவில்லை".

   ஒரு வேளை, விஞ்ஞானிகளிடம் அவ்வளவு பெரிய அளவிலான பரிசோதனைக் கூடங்களோ, பரிசோதனை குழாய்களோ இல்லை! நமது சொந்த எண்ணங்களுக்குள் கடவுளை அளவிட எல்லை வகுக்காதீர். ". .. உன்னைப் போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய் . . . " (சங்கீதம் 50 : 21) எனக் கர்த்தர் கூறினார்.

3. "கடவுளைப் பற்றிய காரியங்கள் அனைத்தையும் நான் புரிந்து கொள்ள முடியவில்லை".

தான் புரிந்து கொள்ளுவதை மட்டுமே நம்பக்கூடிய மனிதன், ஒன்றில் மிகப்பெரிய ஒரு மூளையுடையவனாக இருப்பான் அல்லது மிகச் சிறியக் கொள்கையுடையவனாக இருப்பான். நாம் அவரைப் பற்றி அறிந்து கொள்ளப் போதுமான குறிப்பிட்ட விஷயங்களையும், நமது பொறுப்புகளையும் தேவன் வேதாகமத்தில் தந்திருக்கிறார். (அப். 27 : 22 – 31; 22:16; ரோமர் 12).

தேவன் இருப்பதை நிரூபிக்க உலகமே ஒரு சாட்சியாக இருக்கிறது. ஒரு சிற்பி இல்லாமல் ஒரு சிற்பம் உருவாகியிருக்குமா? ஒரு திட்டமிடுபவன் இன்றி ஒரு திட்டம் உண்டாகுமா? ஒரு காரணமும் இல்லாமல் ஒரு விளைவு ஏற்படுமா? தேவனின் ஞானமும், வல்லமையும் இயற்கையில் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. எனவே, "தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான் . . . (சங். 14 :1). ஒரு வீட்டை ஒரு மனிதன் கட்டியிருப்பது எவ்வளவு நிச்சயமான காரியமோ, அதேபோல இவ்வுலகத்தையும் ஒருவர் படைத்திருக்கிறார். (எபி. 3 : 4).

அவரைத் தொடர்ந்து மறுதலிப்பதால், தேவன் இருப்பதின் நிச்சயம் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

நமது தேவன் – அவர் ஜீவனுள்ள தேவன்!

**Bill Dillon**

எஸ். எஸ். ராஜன்

**ஏப்ரல் 1997**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20,
THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivered Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST